# பெரிய புராணத்தின் வழிகாட்டலில் உயர் இலட்சிய நிறைவேற்றத்தில் சுயமாற்றமும், தியாகமும் பெறும் முக்கியத்துவம் - உளவியல் நோக்கு

## Significance of Self-Transformation and the Sacrifice in the Realization of Higher Ideals in the Guidance of the Periyapuranam: A Psychological Perspective

மாரிமுத்து பிரகாஷன் / Marimuthu Prahasan[1]

Date of submission: 2025-12-23
Date of acceptance: 2025-12-26
Date of Publication: 2025-12-30
Corresponding author's Name: Marimuthu Prahasan
Email: prahasankm@esn.ac.lk

**Abstract**

Within the Tamil Saiva tradition, the *Periyapuranam* occupies a distinctive and exalted position. Compiled by Sekkizhar Swamigal, this sacred work presents the life narratives of the sixty-three Nayanmars who dedicated their lives entirely to Lord Siva. These hagiographies embody a wide range of spiritual and psychological dimensions, including devotion, sacrifice, self-knowledge, love, commitment, and self-transformation. When these narratives are approached not merely as spiritual biographies but through a psychological lens, they offer rich models and illustrative paradigms that are highly relevant to contemporary life. The lives of the Nayanmars, who regarded the attainment of Siva as the highest ideal, provide valuable insights into the processes and disciplines required for the realization of elevated life goals. This study adopts a qualitative and interpretative approach to examine the lives of Siruthondar Nayanar and Karaikkal Ammaiyar from a psychological perspective. Through an analysis of their actions, symbolic gestures, and modes of devotion, the study explores the ways in which their lives offer meaningful guidance for modern psychological understanding and practice. Specifically, the study addresses the following research questions: How do the lives of Siruthondar Nayanar and Karaikkal Ammaiyar articulate psychological processes of self-transformation? In what ways does sacrifice function as a catalyst for inner change in their narratives? How can their lives be understood as exemplary models for psychological constructs such as self-identity, goal-oriented living, and the cultivation of resilience? Furthermore, how can their narratives be meaningfully integrated as illustrative frameworks within contemporary psychological discourse and counseling practices? Methodologically, this qualitative study is based on a close textual analysis of relevant passages from the *Periyapuranam*, supplemented by insights drawn from psychological literature and related scholarly studies. Through this interdisciplinary approach, the research seeks to demonstrate the enduring psychological relevance of these sacred narratives and their potential contribution to modern understandings of human flourishing and self-realization.

**Keywords:** Periyapuranam, Karaikkal Ammaiyar, Siruthondar Nayanar, Psychology

---

[1]The author is a Senior Lecturer in Philosophy at the Department of Philosophy and Value Studies, Eastern University, Sri Lanka. prahasankm@esn.ac.lk

## அறிமுகம்

பெரிய புராணம் தமிழ் சைவ இலக்கியத்தில் மிகுந்த மதிப்புள்ள, கவனத்திற்குரிய ஒரு படைப்பாகும். இது கி.பி 12ஆம் நூற்றாண்டில் சேக்கிழார் சுவாமிகளினால் உருவாக்கப்பட்ட ஒரு தொகுப்பு நூலாகும். இதில் சைவ மரபில் போற்றுதலுக்குரியவர்களாக உள்ள அறுபத்துமூன்று நாயன்மார்களின் வாழ்க்கை வரலாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இவர்கள் தங்களது தியாகம், அர்ப்பணிப்பு, பக்தி, துறவின் ஊடாக சைவமரபின் கடவுள் சிவபெருமானை சரணடைந்து முக்திப்பேறு பெற்றவர்களாவார்கள். இவர்கள் ஒவ்வொருவரது கதையும் நெகிழ்ச்சியை ஏற்படுத்துபவையாகவும், மனிதவாழ்க்கையின் பல்வேறு பரிமாணங்களை வெளிப்படுத்துபவையாகவும் உள்ளன. பாரம்பரியமான ஆன்மீக அணுமுறையில் இருந்து விலகி இந்த கதைகளை உளவியல் நோக்கில் அணுகுகின்றபோது பல்வேறு குறியீடுகளின் ஊடாக நவீன வாழ்க்கைக்கு உரிய வழிகாட்டல்களை உள்ளடக்கியுள்ளமையினை அறிந்துகொள்ள முடிகின்றது. குறிப்பாக சிறுத்தொண்ட நாயனாரதும், காரைக்கால் அம்மையாரதும்; வரலாறு தீவிரமான தியாகத்தின் ஊடாக அடைந்துகொள்ளக்கூடிய சுயமாற்றத்தின் உளவியல் பரிமாணங்களைப் பற்றிய ஆழமான புரிதலை வழங்குகின்றது. இவர்களது வாழ்க்கை ஆழமான, தனிப்பட்ட பக்தியை மாத்திரம் பிரதிபலிப்பதாக அல்லாமல் உளவியல் மீள்எழுச்சித்திறனை பெறுவதற்கும், சுயபரிணாமம் பெறுவதற்கும் பௌதீக எல்லைகளை, உலகியல் நிர்ணயங்களை விஞ்சிய நல்வாழ்க்கையினை வாழ்வதற்கும் ஆன்மீக சரணடைதல் எவ்வாறு ஒரு வழிமுறையாக உள்ளது என்பதனை வெளிப்படுத்துகின்றது.

இந்த ஆய்வானது சிறுத்தொண்டர், காரைக்கால் அம்மையார் ஆகியோரின் வாழ்க்கை பற்றிய விபரிப்பில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் சுயமாற்றம், மற்றும் தியாகம் ஆகியவற்றின் உளவியல் அம்சங்களை வெளிப்படுத்துவதனை இலக்காகக் கொண்டுள்ளது. இவர்களது வாழ்க்கையினை ஆழமான விசாரணைக்கு உள்ளாக்குவதன் ஊடாக சுயமாற்றம் என்பது எவ்வாறு தனிப்பட்ட தியாகங்கள், சுயஅடையாளங்களை தொலைத்து உயர் இலட்சியங்களை பின்தொடர்தல் என்பவற்றுடன் நுணுக்கமான வகையில் பிணைக்கப்பட்டுள்ளது என்பதனை அறிந்துகொள்ள முடிகின்றது. சிறுத்தொண்டரின் தியாகச் செயற்பாடு, காரைக்கால் அம்மையார் உலகியல் அம்சங்களை துறக்கும் செயற்பாடு என்பவை சமகால உளவியல் எண்ணக்கருக்களான உலகியல் எல்லைகளினால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் சுயஅடையாளத்தை கலைதல், மீள்எழுச்சித்திறன் பெறுதல், தனிப்பட்ட அடையாளத்தை மீள்கட்டமைப்பு செய்தல் என்பவற்றுடன் தொடர்புபட்டவையாக உள்ளன. இந்த ஆய்வுக்கட்டுரையானது பின்வரும் ஆய்வு வினாக்களை முன்வைத்து மேற்கொள்ளப்பட்டதாக உள்ளது. சிறுத்தொண்டர், காரைக்கால் அம்மையார் ஆகியோரின் வாழ்க்கை எவ்வாறு சுயமாற்றம் தொடர்பான உளவியல் செயற்பாட்டை விபரிக்கின்றது?, இவர்கள் இருவரும் மேற்கொள்ளும் தியாகம் எவ்வாறு சுயமாற்றத்திற்கு பங்களிப்பு செய்கின்றது?, சுய-அடையாளம், இலக்குநோக்கிய வாழ்க்கை, மீள்எழுச்சித்திறனை உருவாக்குதல் என்ற உளவியல் செயற்பாடுகளுக்கு இவர்களது வரலாறு எத்தகைய முன்னுதாரணமாக கொள்ளப்பட முடியும்?, சமகால உளவியல், ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகளில் இவர்கள் இருவரதும் வரலாறு எவ்வாறு முன்னுதாரணமாக கொள்ளப்பட முடியும்?

சிறுத்தொண்டர், காரைக்கால் அம்மையார் தொடர்பாக பெரிய புராணத்தில் உள்ள விபரிப்புக்களை உளவியல் நோக்கில் அணுகுவது சமகால வாழ்க்கைமுறைக்கு பங்களிப்பு செய்யும் ஒன்றாக உள்ளது. தியாகம், சுயமாற்றம் என்ற பெரிய புராண எண்ணக்கருக்கள் மனித உளவியலின் பிரபஞ்சத்துவமான விடயங்களாக உள்ளன. சமகால சமூகம் தனிமனிதனுக்கு உருவாக்குகின்ற தனிப்பட்ட மற்றும் இருப்பியல் சார்ந்த சவால்களை எதிர்கொள்வதற்கு சுயமீளெழுச்சித்திறனை உருவாக்கிக்கொள்வதற்கும், தனிப்பட்ட

அடையாளத்தை மாற்றியமைத்துக்கொண்டு சூழ்நிலைக்கு இசைவாக செயற்படுவதற்கும், வாழ்க்கையின் அர்த்தத்தை கண்டறிவதற்கும் இந்த முயற்சி பங்களிப்பு செய்வதாக உள்ளது. சமகால உளவியல் கட்டமைப்பிற்குள் இவர்களது செயற்பாடுகளை ஆராய்வதன் ஊடாக தமிழ் பக்தி இலக்கியத்தில் மனித சமூகம் பிரபஞ்சத்துவமாக எதிர்கொள்கின்ற உளவியல் பிரச்சினைகளுக்கு முன்மாதிரியான தீர்வுகள் முன்வைக்கப்பட்டுள்ளமையினை அறிந்துகொள்ள முடியும். இவ்வாறு கற்றுக்கொள்ளப்படக்கூடிய விடயங்கள் தனிமனித அடிப்படையிலும், சமூக மட்டத்திலும் தன்னிலை அடிப்படையிலும், வழிகாட்டல் செயற்பாடுகள் ஊடாகவும் இலக்குநோக்கி செயற்படுவதன் ஊடாக மேம்பட்ட வாழ்க்கையினை அமைத்துக்கொள்வதற்கு வாய்ப்பினை உருவாக்க முடியும்.

### இலக்கிய மீளாய்வு

சமய, கலாசார, ஒழுக்கவியல் நோக்கில் பெரிய புராணம் தொடர்பாக பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ் அடையாளம், ஆன்மீகம், ஒழுக்க விழுமியங்கள் என்பவற்றினை முன்நிலைப்படுத்துவதில் இந்த நூல் பெறுகின்ற முக்கியத்துவத்தினை பல்வேறு புலமையாளர்கள் தங்களது ஆய்வுகளின் ஊடாக வெளிப்படுத்தியுள்ளனர். இந்த இலக்கியத்தின் வரலாற்றுச்சூழல், சேக்கிழாரின் எழுத்தாற்றல், துறவிகளின் பக்தி முதலானவை இந்த ஆய்வுகளில் கவனம் செலுத்தப்பட்டுள்ளன (Kumaran, 2014: 6; James, 2009: 328; Hudson, 1989: 376; Gaur, 1990: 417). சிறுத்தொண்டரின் தியாகம் உயர்ந்த பக்தியின் வெளிப்பாடாகவும், காரைக்கால் அம்மையாரின் தீர்மானம் வாழ்க்கை தொடர்பாக உருவான ஏமாற்றத்தின் பிரதிபலிப்பாகவும் அதன் ஊடாக தன்னுடைய பக்தியை சிவனிடத்தில் வெளிப்படுத்தியுள்ளார் என்ற வகையிலும் இந்த ஆய்வுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் இந்த துறவிகளது ஆன்மீக, ஒழுக்க பெறுமானங்களில் கவனம் செலுத்துகின்ற இந்த ஆய்வுகள் அவர்களது செயற்பாடுகளின் பின்னணியில் உள்ள உளவியல் அம்சங்களில் கவனம் செலுத்துவதனையும், அவற்றினை சமகால வாழ்க்கைக்கான படிப்பினையாக எடுத்துக்கொள்வதற்கும் தவறியவையாக உள்ளன. இந்த ஆய்வு இடைவெளியினை அடையாளம் கண்ட வகையில் சுய-பரிணாமத்தில் முன்னேறுவதற்கும், உறுதியான மீள்எழுச்சித்திறனுடன் வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்வதற்கும், சுயதிறனில் முன்னேற்றம் பெறுவதற்கும் இவர்களது வாழ்க்கை எத்தகைய வழிகாட்டல்களை முன்வைப்பதாக உள்ளது என்பதில் கவனம் செலுத்துகின்ற வகையில் இந்த ஆய்வு முக்கியத்துவம் கொண்டதாக உள்ளது.

### கோட்பாட்டுக்கட்டமைப்பு

பெரிய புராணத்தின் வாழ்க்கை வழிகாட்டல்களுக்கான அடிப்படைகளை விளங்கிக்கொள்வதற்காக இரண்டு பிரதானமாக கோட்பாட்டுக்கட்டமைப்புக்கள் இந்த ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாவது சுயமாற்றக் கொள்கை (Self transformation theory), இரண்டாவது தியாகத்துடன் தொடர்புடைய உளவியல் அம்சங்கள் (Sacrifice in Psychology).

சுயமாற்றக்கொள்கை உளவியலிலும், அபிவிருத்திக்கற்கைகளிலும் தன்னுடைய அடிப்படையினைக் கொண்டுள்ளது. இதில் வாழ்க்கையில் எதிர்கொள்ளப்படும் சவால்களுக்கு தனிப்பட்ட மாற்றங்களின் ஊடாக எவ்வாறு முகம்கொடுக்க முடியும் என்ற விடயம் கவனத்தில் கொள்ளப்படுகின்றது. இங்கு தனிப்பட்ட அடையாளத்தை மறுசீரமைப்பு செய்வதன் ஊடாக முன்னேற்றமடைவதற்குரிய வாய்ப்புக்கள் பரிசீலனைக்கு உள்ளாக்கப்படுகின்றன. தனிமனித தனித்துவத்தை வலியுறுத்தும் இந்த கோட்பாடு ஒருங்கிணைக்கப்பட்ட சுயத்தை மையமாகக் கொண்ட செயற்பாடுகள் மற்றும் உறுமாறுகின்ற அனுபவங்கள் எவ்வாறு ஒருவருடைய அடையாள உணர்வினை மாற்றியமைக்கின்றது என்பது கவனத்தில் கொள்ளப்படுகின்றது. சிறுதொண்டர், காரைக்கால் அம்மையார் ஆகியோர் மேற்கொண்ட சுயமாற்றம் அவர்களது பக்தியுடன் தொடர்புடைய முடிவுகளின் ஊடாக

மேற்கொள்ளப்படுகின்றது. அது அவர்களது செயற்பாடுகள், அடையாளங்கள், உலகத்துடனான தொடர்பு என்பவற்றினை மறுவரையறை செய்கின்றது. இந்த கோட்பாட்டின் ஊடாக இவர்களது வாழ்க்கையினை பகுப்பாய்வுக்கு உள்ளாக்குவது நெகிழ்ச்சித்தன்மையுடன் கூடிய புதிய சுயகட்டமைப்பினை உருவாக்குகின்ற தனிப்பட்ட பரிணாம வளர்ச்சிக்கு பக்தி எவ்வாறு ஒரு ஊக்கியாக செயற்பட்டுள்ளது என்பது பற்றி ஒரு ஆழமான புரிதலை ஏற்படுத்திக்கொள்ள முடிகின்றது (Peck, 1978: 186)

தியாகத்துடன் தொடர்புடைய உளவியல் அம்சங்கள் என்பது தனிப்பட்ட வகையில் மதிப்புமிக்கதாக கருதுகின்ற ஒன்றினை தன்னார்வ அடிப்படையில் விட்டுக்கொடுப்பதனை குறிக்கின்றது. குறிப்பாக கருதிக்கொள்ளப்பட்ட ஒரு உயர்ந்த நோக்கத்தினை இலக்காகக்கொண்டே உளரீதியான ஏற்றுக்கொள்ளுதலுடன் தியாகச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. உளவியல் நோக்கில் தியாகம் என்பது சுயத்தை மறுத்தல், தன்னுடைய நலன்களைவிட பிறருடைய நலன்களை முன்நிலைப்படுத்துதல், மேற்கொள்ளப்பட்ட கடினமான தெரிவுகளை தொடர்ந்து பேணுவதற்கான மனவலிமை என்பவற்றினை உள்ளடக்கியதாக உள்ளது. தியாகம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட உளவியல் ஆய்வுகள் அத்தகைய செயற்பாடுகள் சுயமுன்னேற்றமடைதல், அதிகாரம் பெறுதல், அடையாள விஸ்தரிப்பு, வாழ்க்கையில் உயர்வான இலக்குகளை அடைதல் என்பவற்றிற்கு பங்களிப்பு செய்கின்றது என்பதனை வெளிப்படுத்துகின்றன (Yogananda, 2006: 48; Koci, 2022: 230). ஆய்வுக்கு உள்ளாக்கப்படுகின்ற இருவரதும் வாழ்க்கையில் இந்த கோட்பாட்டுக்கட்டமைப்பினை பிரயோகிப்பது அவர்களது தியாகம் எவ்வாறு சுயமாற்றம் பெறுவதற்கான இயலுமையினை வழங்கியது என்பதனை கண்டறிவதற்கு வாய்ப்பினை வழங்குகின்றது. குறிப்பாக அதீத பக்தியும், சுயமறுப்பும் எவ்வாறு உயர்வான ஆன்மீக நிலைக்கு பங்களிப்பு செய்தது என்பதனையும், நீடித்து நிலைத்து நிற்கின்ற உளஆற்றலை வழங்கியது என்பதனையும் அறிந்துகொள்ள முடிகின்றது.

### ஆய்வு முறையியல்

பெரிய புராணம் வெளிப்படுத்தும் மேற்குறித்த இருவரதும் வாழ்க்கையினை புரிந்துகொள்வதற்கு உளவியல் நோக்கிலான பகுப்பாய்வு முறை பயன்படுத்தப்பட்டு பண்புசார்ந்ததாக இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அடிப்படையான உளவியல் செயன்முறைகளை புரிந்துகொள்வதற்கு பெரியபுராண விளக்கவுரையில் முன்வைக்கப்பட்டுள்ள அவர்களது செயற்பாடுகள், பயன்படுத்தப்பட்டுள்ள மொழிநடை, குறியீடுகள் என்பவை கவனமான பரிசீலனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. இதன் ஊடாக அவர்களது கலாசார பின்னணி, சமய ஈடுபாடு என்பவற்றின் அடிப்படையில் தியாகம், சுயமாற்றம் என்பன புரிந்துகொள்ளப்படுவதற்குரிய முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. நூல்களை அடிப்படையாகக் கொண்ட இந்த இரண்டாம் நிலை ஆய்வின் அடிப்படையான மூலநூலாக பெரிய புராணம் அமைந்துள்ளது. இரண்டாம் நிலை நூல்களாக தியாகம், சுயமாற்றம் தொடர்பான உளவியல் நூல்களும், தொடர்புடைய பல்வேறு ஆய்வுக்கட்டுரைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

சிறுத்தொண்ட நாயனாரின் தியாகம், சுயமாற்றம் தொடர்பான உளவியல் பகுப்பாய்வு

பரஞ்சோதி எனும் இயற்பெயர் கொண்ட சிறுத்தொண்ட நாயனார் இராணுவத்தளபதி அந்தஸ்தில் பணியாற்றியவர். அந்த சந்தர்ப்பத்திலேயே சிவபெருமான்மீது ஆழமான பக்தி கொண்டு சிவனடியார்களுக்கு சேவை செய்து வந்தவர். பல்வேறு சாதனைகள் செய்து உயர்வான சமூக அந்தஸ்தில் வாழ்ந்து வந்த நிலையில் அதனை கைவிட்டு ஆன்மீக செயற்பாடுகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டவர். இந்த மாற்றம் உயர் இலட்சியத்தை நோக்காகக் கொண்ட அவருடைய முதலாவது சுயமாற்றமாக அமைந்துள்ளது. சமூகத்தில் இருந்து மிகுந்த மதிப்பையும், கௌரவத்தையும் பெற்றுக்கொள்ளக்கூடிய

நிலையில் இருந்து விலகி தெய்வீகமான, தன்னலமற்ற பக்திக்கு தன்னை அர்ப்பணித்துக்கொண்டார். இந்த மாற்றம் அவருடைய அடையாளம், மற்றும் மதிப்புக்கள் தொடர்பில் தீவிரமான மறுவரையினை ஏற்படுத்தியுள்ளது. இதன் தொடர்ச்சியாக தன்னுடைய சொந்த மகனை சிவனடியாருக்காக பலியிடுவதற்கு துணிந்து செயற்பட்டமையானது இவ்வுலகவாழ்க்கையில் உயர்வாக நோக்கப்படுகின்ற புத்திரபாக்கியத்தை துறப்பதற்கு முனைந்த தியாகச் செயற்பாடாக அடையாளப்படுத்தப்படுகின்றது. இந்த செயற்பாடுகள் உலகியல் இன்பங்களில் அல்லாமல் பூரணமான தெய்வீக சித்தத்திற்கு அர்பணிப்பு செய்வதன் ஊடாகவே அல்லது உலகியல் வெற்றிகளினால் அல்லாமல் உலகியல் வாழ்விற்கு உரியதாக அடையாளப்படுத்தப்பட்ட விடயங்களை துறந்து செயற்படுவதன் ஊடாகவே தன்னுடைய வாழ்க்கைக்கு அர்த்தத்தை வழங்குவதற்கு முயற்சித்துள்ளார் (பிரகாஷன், 2022: 79).

சிறுத்தொண்டர் மேற்கொண்ட இரண்டு தியாகங்களும் தன்னலமற்ற அர்ப்பணிப்பின் உச்சத்தை பிரதிபலிக்கின்றன. மகனை உணவாக கேட்டபோது அதியுச்ச தார்மீக சிக்கல்நிலையினை எதிர்கொண்ட இவர் அர்ப்பணிப்புடனான பக்தியின் ஊடாக அதனை சமநிலைப்படுத்தியுள்ளார். உளவியல் நோக்கில் இத்தகைய செயற்பாட்டிற்கு சுய-துறவின் தீவிரமான நிலை அவசியமாகவுள்ளது. ஏனெனில் இங்கு தனிப்பட்ட உலகியல் பிணைப்புக்கள், உணர்வுகள் என்பவற்றினைத்தாண்டி கருதிக்கொள்ளப்பட்ட உயர்நோக்கிற்காக செயலாற்றுவது இடம்பெறுகின்றது. ஒரு தந்தையாக உலகியல் வாழ்வில் குடும்பத்திற்கும், மகனிற்கும் பாதுகாப்பாக செயற்பட வேண்டியவர் அதனை தாண்டி ஒரு அர்ப்பணிப்புடன் கூடிய இறைவிசுவாசியாக தன்னை வெளிப்படுத்தியுள்ளார். உணர்ச்சிப்போராட்டத்தின் மத்தியில் சரணடைதலை தேர்வு செய்திருப்பதானது உலகியல் எல்லைகளுக்கு அப்பாற்பட்ட சுயத்தினை கடந்தநிலையில் தனிப்பட்ட ஆசைகள், பயங்களை கடந்து உயர்வான ஒன்றுடன் இணைக்கப்பட்ட நிலையினை வெளிப்படுத்துகின்றது. சாதாரண மனிதர்களுக்கு அசாதாரணமான உளப்போராட்டத்தை ஏற்படுத்தக்கூடிய இந்த நிகழ்வினை சிறுத்தொண்டர் எதிர்கொண்ட விதம் அவர் தன்னுடைய அகங்கார உணர்வில் இருந்து நீங்கி, இறைவனுடன் தன்னை ஐக்கியப்படுத்தி செயற்படுவதற்கு தயாராக இருந்தமையினாலேயே சாத்தியமாகியுள்ளது. சரணடைவின் ஊடாக சுயத்தை விரிவாக்கம் செய்வதற்கு வாய்ப்பினை ஏற்படுத்திய இந்த நிகழ்வு சிறுத்தொண்டர் தன்னுடைய தனிப்பட்ட அடையாளத்தை உயர்நோக்கத்துடன் இணைத்துக்கொண்டு தன்னலமற்றவகையில் செயற்படுவதன் ஊடாகவே சாத்தியமாகியுள்ளது.

இந்த தியாகத்தின் உளவியல் அம்சங்கள் மிகுந்த கவனத்திற்குரியவையாக உள்ளன. பெற்றோருக்கு இருக்கவேண்டிய உள்ளுணர்விற்கு எதிராக செயற்படுவதற்கு அவர் தீர்மானித்தமையும், விருப்புடன் செயற்பட்டமையும் துறத்தல், சரணடைதல், சுயம் கடந்தநிலையில் செயற்படுதல் என்ற உளவியல் அடிப்படைகளைக் கொண்டதாக உள்ளது. சுயஅடையாளத்தையும், நோக்கத்தையும் பக்தியே மறுகட்டமைப்பு செய்வதாக உள்ள அவர் தேர்வுசெய்த பாதை சாதாரண மனிதர்களுக்கு இருக்கக்கூடிய அகங்கார எல்லையினை தாண்டியதாக உள்ளமை கவனத்தில் கொள்ளத்தக்கதாகும். இங்கு கடந்தநிலை, துறத்தல், சரணடைதல் என்ற மூன்று உளவியல் அம்சங்கள் கவனத்திற்குரியவையாக உள்ளன.

கடந்தநிலை என்பது உளவியல் நோக்கில் சுயத்தை மையமாகக் கொண்ட கருத்தில் இருந்து நீங்கி மற்றவர்கள் தொடர்பில் பச்சாதாபம், நல்லிணக்கம், தொடர்பு என்ற பண்புகளின் அடிப்படையில் இயங்குவதனை குறிக்கின்றது. அர்த்தம் அல்லது நோக்கம் என்பதன் விரிவான வடிவமாக அமையும் இதில் சுயதிறன்இயல்பு நிறைவடைகின்றது. சிறுத்தொண்டரின் வாழ்க்கையில் இந்த கடந்தநிலை என்பது பொருளியல் உலகினை கடந்து இறுதியான உண்மை அல்லது தெய்வீக ஆற்றலுடன்

இணைப்புபெற்ற நிலையினை குறிக்கின்றது. அவர் தன்னுடைய தனிப்பட்ட ஆசைகள், உலகியல் கவனங்கள் என்பவற்றில் இருந்து விடுபட்டு ஆன்மீக உண்மையுடன் அல்லது நோக்கத்துடன் தன்னை இணைத்துக்கொள்கின்றார். சாதாரண மனிதர்களுக்குரிய எல்லைகள், விருப்பங்கள் என்பவற்றினை தாண்டிய இந்த உயர்நிலைக்குரிய சாத்தியம் அவர் கொண்டிருந்த இறைநம்பிக்கை, விசுவாசம் என்பவற்றினாலேயே சாத்தியமானது. துறத்தல் என்பது இரண்டு தளங்களில் இடம்பெற்றுள்ளது. முதலாவது அவர் தன்னுடைய உலகியல் அடையாளத்திற்குரிய பதவியினை துறத்தல். இரண்டாவது தன்னுடைய தனிப்பட்ட பிணைப்பாக இருந்த மகனை துறத்தல். இந்த வகையான துறப்பு அகங்காரத்தை கலைத்தல் எனும் உளவியல் நோக்கில் அனுகப்படக்கூடியதாக உள்ளது. இதன்போது மிக உயர்ந்த இலக்கினை அடைவதற்காக சுயஉணர்வில் மாற்றமடைதல் அல்லது சுயஉணர்வினை இழத்தல் இடம்பெறுகின்றது. இறுதிநிலை என்று கூறத்தக்க தியாகத்தை மேற்கொள்வதன் ஊடாக சிறுதொண்டர் தன்னுடைய அகங்காரத்தை ஒருவகையான திறனுடன் அகற்றி முழுமையான சுயமறுப்பு தேவைப்படுகின்ற பக்தியினை தழுவிக்கொண்டுள்ளார். இந்த உளவியல் மாற்றமானது தனிப்பட்ட முன்னுரிமைப்படுத்தல்களை மறுகட்டமைப்பு செய்வதனை உள்ளடக்கியதாக உள்ளது. அதாவது தந்தை என்ற அவருடைய வகிபாகமும், மகனுடன் உள்ள பிணைப்பும், கடமையும் பக்தன் என்ற அடையாளத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. சரணடைதல் என்பது உளவியல் நோக்கில் தனக்கு தன்னிடம் உள்ள கட்டுப்பாட்டை கைவிடுதல், நலிவடைந்த நிலையில் இருப்பதனை ஏற்றுக்கொள்ளுதல் என்பவற்றினை உள்ளடக்கியதாக உள்ளது ஆன்மீக தளத்தில் இது இன்றியமையாததாக உள்ளது. சிறுத்தொண்டரின் சரணாகதியானது தெய்வீக கோரிக்கையினை ஏற்றுக்கொள்வதன் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெற்றோருக்கு இருக்கின்ற உள்ளுணர்வு, சொந்த விருப்பங்கள் என்பவற்றினை தாண்டியதாக அது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் தனிப்பட்ட விருப்பார்வம் தெய்வீக விருப்பார்வத்திற்கு உற்படுத்தப்படுகின்றது (Hudson, 1989: 380; Monius, 2004: 128). இந்த சுயமாற்றம் அர்ப்பணிப்புடன் கூடிய பக்தி என்பது சாதாரண மனித பற்றுதலைக்கடந்து சுய அடையாளத்தையும், சுயகருத்தாக்கங்களையும் மாற்றியமைக்கும் ஆற்றல் கொண்டது என்பதனை வெளிப்படுத்துகின்றது.

இவ்வாறு சுயபரிணாமம் பெற்று சிறுத்தொண்டர் மேற்கொண்டுள்ள ஆன்மீக பயணம் என்பது அவருடைய தனிப்பட்ட அடையாளம் மற்றும் சமூகத்தில் அவருடைய வகிபாகம் என்பவற்றில் ஆழமான தொடர்பினைக் கொண்டதாக உள்ளது. தனிப்பட்ட அல்லது சுய அடையாளத்தில் ஏற்படுத்திய மாற்றம் என்பது ஒரு இராணுவத்தளபதி, தந்தை என்ற சமூக பாத்திரங்களை தாண்டி செயற்படுவதற்கு மேற்கொண்ட முடிவில் வெளிப்படுகின்றது. இது ஒருவகையான சுயஅறிதலுடன் தொடர்புடையதாக நோக்கக்கூடியதாக உள்ளது. இங்கு வாழ்க்கைக்கான அர்த்தம் தனிப்பட்ட அடைவுகள், உறவுகள் என்பவற்றுடன் தொடர்புபட்டதாக அல்லாமல் உயர்வான இலட்சியத்திற்கு அர்ப்பணித்து செயற்படுவதன் ஊடாகவே வழங்கப்படுகின்றது. இங்கு அவருடைய தனிப்பட்ட அடையாளமும், ஆன்மீக நோக்கமும் இணக்கமாக அமைந்திருப்பது அவருடைய ஆன்மீக உளவியல் பயணத்தில் உச்சநிலையினை அடைந்து புனிதராக உருமாற்றம் பெறுவதற்குரிய வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது (Yaden, Newberg, 2022: 239). மறுவகையில் சமூக தாக்கம் என்பது தமிழ் சைவ கலாசாரத்தில் சுயநலமற்ற பக்தி, சரணடைதல் என்பவற்றிற்கான அடையாளமாக சிறுதொண்டரை மாற்றியுள்ளது. தெய்வீக பக்திநிலையில் உயர்நிலைக்கு செல்வதற்கு முயற்சிப்பவர்களுக்கு இவருடைய வாழ்க்கை முன்மாதிரியாக மாறியுள்ளது. ஆன்மீக சமூகத்திற்கு எடுத்துக்காட்டாக அமையும் இந்த வாழ்க்கை தனிப்பட்ட தியாகங்கள் எவ்வாறு அவருடைய சுயத்தினை தாண்டி உயர்நிலை வாழ்க்கையினை ஒட்டுமொத்த சமூகத்திற்கும் வழங்கும் என்பதற்கு இது எடுத்துக்காட்டாக

உள்ளது.

இவ்வாறு சிறுத்தொண்டருடைய வாழ்க்கை பக்தி, தியாகம், துறவு, சுயத்தை கடந்த நிலையில் செயற்படுதல் என்பன எவ்வாறு தன்நிலை மாற்றத்திற்கும், ஒட்டுமொத்த சமூகத்திற்கும் பங்களிப்பு செய்யக்கூடிய வாய்ப்பினை வழங்குகின்றது என்பதனை புரிந்துகொள்ள முடிகின்றது. மேலும் தனிப்பட்ட வகையிலும், சமூகநிலையிலும் எவ்வாறு பக்தி ஒரு இயங்குசக்தியாக செயற்பட முடியும் என்பதற்கும் இவருடைய வாழ்க்கை ஒரு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

### காரைக்கால் அம்மையாரின் தியாகம், துறவு, சுயமாற்றம் தொடர்பான உளவியல் பகுப்பாய்வு

புனிதவதி எனும் இயற்பெயர் கொண்டு, அழகும், அறிவாற்றலும் மிக்கவராக செல்வந்த குடும்பத்தில் பிறந்து, செல்வந்தமான குடும்பத்திலேயே திருமண வாழ்க்கை அமையப்பெற்ற காரைக்கால் அம்மையார் இளம் வயதில் இருந்தே சிவபெருமானிடத்தில் மிகுந்த பக்தி கொண்டவராக அறியப்படுகின்றார். திருமணவாழ்க்கையில் இருக்கும்போது ஏற்பட்ட ஒரு அதிசய நிகழ்வினைத்தொடர்ந்து மிகவும் மோசமான ஒரு இழப்பினை எதிர்கொண்டார். அது அவரது கணவன் பிரிந்து சென்றதாக இருந்தது. தொடர்ந்து கணவன் மறுமணம் செய்துகொண்டமையினையும், தன்னை ஏற்றுக்கொள்வதற்கு தயாராக இல்லை என்பதனையும் அறிந்து உளரீதியான பாதிப்புக்கு உள்ளாகின்றார். இதனைத்தொடர்ந்து தன்னார்வ அடிப்படையில் துறவு வாழ்க்கையினை ஏற்றுக்கொள்கின்றார். அத்துடன் பெண்மைக்கு உரியதாக போற்றப்படுகின்ற அழகினையும் வேண்டித்துறக்கின்றார் (செல்வராசு, 2023: 16) வாழ்க்கையில் எதிர்கொண்ட இழப்புக்களுக்கு முகம்கொடுப்பதற்காக தன்னுடைய இறுதி இலக்கினை அடைந்துகொள்ளும் முயற்சியின் உடனடி செயற்பாடுகளாக, உளமீள்எழுச்சிக்கான வழிமுறைகளாகவே இவை மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையில் தன்நிலையினை கடந்த செயற்பாடுகள் ஊடாக இறைவனை தரிசித்தார், உடன் இருக்கும் வாய்ப்பினை பெற்றார் என்று அறிந்துகொள்ள முடிகின்றது. இங்கு கணவன், செல்வந்தமான வாழ்க்கை, இளமை அழகு என்ற விடயங்கள் ஒன்றாக தியாகம் செய்யப்படுகின்றன. அனைத்தையும் துறந்து பக்தி மார்க்கத்தை ஏற்றுக்கொள்கின்றார். இந்த தியாகமும், துறவும் உளவியல் அடிப்படையில் மிகுந்த கவனத்திற்குரியவையாக உள்ளன.

அகநிலையில் கொண்டிருந்த பக்தி, முதிர்ச்சி, பற்றற்ற நிலை என்பனவற்றுக்கு ஈடான வகையிலேயே இளம் வயதில் அழகிய தோற்றமுடைய பெண்ணான புனிதவதி முதிய தோற்றத்தை சிவனிடத்தில் வேண்டிப்பெற்றுக்கொண்டமை நோக்கப்பட வேண்டியதாக உள்ளது. இது தொடர்ந்தும் தான் இவ்வுலகியல் வாழ்க்கையில் ஈடுபடுவதற்கு எந்தவகையிலும் நிர்ப்பந்திக்கப்படக்கூடாது என்பதனை மனதில்கொண்டு எடுக்கப்பட்ட தீர்மானமாகவும் நாம் கருதிக்கொள்ள முடியும். சமூக அங்கீகாரத்திற்குரியதாக இருக்கக்கூடிய இளமை, அழகு என்பவற்றினை மாற்றி புறத்தோற்றத்தில் இவ்வாறு பெற்றுக்கொண்ட மாற்றம் அஹங்காரத்தின் அல்லது சுயத்தின் மரணம் என்று குறிப்பிடப்படுகின்றது (கமலவேலன், 2009: 65; மனோன்மணி. 2011: 127). சமூகத்தில் ஒருவரை அடையாளப்படுத்துகின்ற விடயங்களை துறந்து உயர்ந்த நோக்கத்திற்காக அதற்கு உரிய அடையாளங்களை சமூக வழமைகளுக்கு மாறான வகையில் வேண்டிப்பெற்றுக்கொள்வது அதியுச்ச சமர்ப்பணத்தின் வெளிப்பாடாகும். சமூகம் பெறுமதியுடையது என்று நிர்ணயித்திருக்கும் விடயங்களுக்குள் அகப்பட்டு செயற்படாமல் தான் பெறுமதியுடையது என்று கருதும் விடயங்களுக்கு இணங்க சுயமாற்றம் பெற்று செயற்படுவது இறுதி இலட்சியத்தில் கொண்டிருந்த ஈடுபாடு, அதனை அடைவதற்கு பெற்றிருந்த அதீத மனவுறுதி என்பவற்றினாலேயே சாத்தியமாகும் விடயங்களாகும். மரபார்ந்த வகையில் கட்டமைக்கப்படும் சுயம் பற்றிய சிந்தனைகளில் இருந்து நீங்கி சுயம் கடந்த நிலையில் மேற்கொண்ட இந்த தீர்மானம் ஆன்மீக, மற்றும் உளவியல் கூறுகளின் இணைவின் ஆற்றலினை வெளிப்படுத்துகின்றன.

இந்த தீர்மானம் அவரை எந்தவொரு பாரம்பரியமான இவ்வுலக அடையாளங்களினாலும் பிரதிநிதித்துவப்படுத்தாமல் தனித்துவமாக தானே உருவாக்கிய வழிமுறையில் எம்முன்னே இன்றும் நிலைக்கச்செய்துள்ளது.

புனிதவதியாக இருந்து காரைக்கால் அம்மையாராக இவருடைய நிலைமாற்றம் ஒரு உளவியல் பரிணாமமாக நோக்கத்தக்கதாகும். உலகியல் நிர்ணயங்களுக்கு உற்பட்ட அடையாளத்தை கடந்து, முழுமையான துறவினை சுவீகரித்து தன்னுடைய பக்தியினால் வரையறை செய்யப்பட்ட அடையாளத்தை ஏற்றுக்கொள்கின்றார். இவ்வாறு மாற்றத்தின் ஊடாக சுய அடையாளம் உளவியல் நோக்கில் மிகுந்த கவனத்திற்குரியதாக உள்ளது. சமூக வகிபாகங்களையும், இளமையினையும், அழகினையும் துறப்பதன் ஊடாக உலகியல் விடயங்களில் இருந்து விடுபட்டு துறவு அடையாளத்தை பெறுவது பற்றற்ற நிலையின் உளவியல் பயணமாக உள்ளது. இந்த பயணம் சுயம் தொடர்பில் சமூகத்தினால் நிர்ணயிக்கப்படுகின்ற அம்சங்களில் இருந்து நீங்கி ஆன்மீக நோக்கங்களினால் நிலைப்படுத்தப்பட்டதாக உள்ளது (O'Flaherty, 1988: 207). இதன் ஊடாக காரைக்கால் அம்மையார் பெற்றுக்கொள்ளும் உள்ளார்ந்த சுதந்திரம் நிறைவான வாழ்க்கை இன்பத்தை பௌதீக பொருற்களினால் அல்லாமல் ஆன்மீக பயிற்சிகளினாலும், தெய்வீக இணைப்பினாலும் வழங்குவதாக உள்ளது.

### சிறுத்தொண்டர், காரைக்கால் அம்மையார் ஆகியோரின் தியாகம், சுயமாற்றம் தொடர்பான ஒப்பீட்டு நோக்கு.

சிறுத்தொண்டர் சிவபெருமான் தொடர்பில் தன்னுடைய பக்தியினை தன்னுடைய குடும்பத்திற்குள் பலியிடும் செயற்பாட்டின் ஊடாக வெளிக்காட்டியுள்ளார். அவருக்கான சோதனை தன்னுடைய அன்புக்குரிய மகனை பாதுகாப்பதா அல்லது சிவனுக்குரிய அர்ப்பணிப்பினை பாதுகாப்பதா என்பதாக உள்ளது. இந்த சந்தர்ப்பத்தில் தன்னுடைய பக்தியினை மேல்நிலைப்படுத்தி குடும்ப பந்தத்தை கீழ்நிலைப்படுத்தி மகனை இழப்பதற்கு தீர்மானம் மேற்கொள்கின்றார். புறத்தே தனியாக உள்ள ஒன்று இங்கு தியாகம் செய்யப்படுகின்றது. அது அவர் பாதுகாக்க வேண்டிய மகன். ஆனால் காரைக்கால் அம்மையாரின் விடயத்தில் புறத்தே தனியாக உள்ள விடயம் அல்லாமல் தன்னிலேயே இயல்பாக உள்ள அழகு, இளமை என்பவற்றினை துறக்கின்றார். தன்னுடைய சுய அடையாளத்தையும், சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற ஆசையினையும் துறக்கும் நிலை ஆழமான சுய தியாகமாக அமைந்துள்ளது. இவ்வாறு அன்புக்குரிய ஒன்றினை இழப்பதன் ஊடாக சிறுத்தொண்டரும், சுய அடையாளத்திற்குரியதான விடயத்தை இழப்பதன் ஊடாக காரைக்கால் அம்மையாரும் பக்தி எவ்வாறு தனிப்பட்ட சுயமாற்றங்களுக்குரிய ஆற்றலை வழங்குகின்றது என்பதற்கு முன்னுதாரணமாக உள்ளனர்.

இவ்வாறு மாறுபட்ட வழிமுறைகளின் ஊடாக தங்களது தியாகங்களை மேற்கொண்டுள்ள போதிவும் பல்வேறு பொதுவான உளவியல் கருத்தாக்கங்களை கொண்டிருக்கின்றனர், இவற்றில் சுயமாற்றத்திற்கான பொதுவான பாதையினை அடையாளம் காணக்கூடியதாக உள்ளது. கடந்தநிலை செயற்பாடு, சுயத்தின் அழிவு, சுய-தூய்மையாக்கம், இறுதி இலட்சியமான தெய்வீக இணைவிற்கான ஏக்கம் என இவற்றினை குறிப்பிட முடியும்.

கடந்தநிலை எனும் விடயம் தொடர்பில் நோக்குகின்றபோது இருவரும் பாரம்பரியமான மனித விருப்புக்கள், எதிர்பார்ப்புக்கள், பயங்கள் என்பவற்றினை மீறிய செயற்பாடுகளையே மேற்கொண்டுள்ளனர். சிறுத்தொண்டர் தன்னுடைய பாரம்பரிய குடும்ப பொறுப்பினை மீறியும், காரைக்கால் அம்மையார் சமூக எதிர்பார்ப்பை கடந்தும் செயற்பட்டுள்ளனர். இருவரும் சுயத்தை மையமாகக் கொண்ட கரிசனைகளில் இருந்து விலகியுள்ளனர், மிகவுயர்வான ஆன்மீக பிரக்ஞைநிலையினை அடைந்துள்ளனர். சுயத்தின் அழிவு எனும் விடயம் தொடர்பில் நோக்குகின்றபோது மிகவுயர்ந்த இலட்சியத்தில் பங்களிப்பு செய்வதற்காக அல்லது அந்த இலட்சியத்தில்

ஒரு அங்கமாக இருப்பதற்காக தனிபட்ட சுய அடையாளங்களை இழந்து செயற்படுவதனை குறிக்கின்றது. சிறுத்தொண்டர் ஒரு தகப்பன் எனும் உள்ளுணர்வினை தாண்டி சிவனுடைய விருப்பத்திற்கு இணங்க செயற்படுவது அவருடைய அகஹ்கார அழிவின் அம்சமாகவே உள்ளது. மறுவகையில் காரைக்கால் அம்மையார் புனிதவதியாக தனக்கு பெறுமதியுடையதாக இருக்கக்கூடிய அழகு, இளமை என்பவற்றினை துறப்பது அவருடைய அஹங்கார அழிவின் அம்சமாகவும், பக்திவழியில் செல்வதற்கு கொண்டிருந்த மனவுறுதியாகவும் வெளிப்படுகின்றன. இந்த இரண்டு கதைகளிலும் உயர்நிலை ஆன்மீக இணைவினை பெறுவதற்கு அஹங்காரத்தின் அழிவு அவசியமாக உள்ளது என்பது வெளிப்படுகின்றது. உண்மையில் இது ஒரு உளவியல் அவசியப்பாடாகும். சுய-தூய்மையாக்கம் என்பது இரண்டுபேரும் தங்களது தியாகச் செயற்பாட்டின் ஊடாக சுய-தூய்மைடைதலை பெறுகின்றனர், இதன் ஊடாக இவ்வுலக பந்தங்களில், பற்றில் இருந்து விடுபட்டு உளவியல் ரீதியான தூய்மைநிலையினை அடைகின்றனர். தெய்வீக இணைப்பிற்கான ஏக்கம் எனும் விடயம் தொடர்பில் நோக்குகின்றபோது கடந்தநிலை செயற்பாட்டின் இறுதி அம்சமாக ஒப்பற்ற தெய்வீகத்துடன் இணைய வேண்டும் என்ற ஏக்கம் இருவருக்கும் இருந்துள்ளமையினை அவதானிக்க முடிகின்றது. இந்த தெய்வீக இணைப்பு ஒரு ஆன்மீக இலட்சியமாக மாத்திரம் அல்லாமல் தனிப்பட்ட அடையாளத்தை மறுசீரமைப்பு செய்கின்ற உளவியல் செயன்முறையாகவும் உள்ளது.

### உளவியல் வழிகாட்டல்களுக்கான தொடர்புகள்

காரைக்கால் அம்மையார், சிறுத்தொண்டர் பற்றிய விபரிப்புக்கள் ஊடாக ஆன்மீக ஈடுபாடும், செயற்பாடுகளும் மீள்எழுச்சித்திறன் உருவாக்கம், இலக்கு நோக்கிய செயற்பாடு, சவால்களை எதிர்கொள்தல் என பல்வேறு விடயங்களுக்கான உந்துசக்திகளாக செயற்படக்கூடியது என்பதனை உறுதிசெய்துகொள்ள முடிகின்றது. எதிர்பார்ப்புகளுக்கு முரணான விடயங்கள் நிகழ்தல், இழப்புக்கள், எதிர்காலம் பற்றிய பயம் முதலாவற்றின்போது ஏற்படக்கூடிய பதகளிப்பு போன்ற உளவியல் பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கும், இழப்புக்களில் இருந்து மீள்வதற்கான மீள்எழுச்சித்திறனை உருவாக்குவதற்கும் அடைவதற்கு எதிர்பார்க்கும் இறுதியாக இலட்சியத்தில் உறுதியாக இருத்தல் எவ்வாறு ஒரு உள குணமாக்கள் முறையாக செயற்படுகின்றது என்பதனை இவ் இரண்டு நாயன்மார்களது கதைகளில் இருந்தும் அறிந்துகொள்ள முடிகின்றது. அத்துடன் ஒவ்வொருவரும் தங்களது பெறுமானங்களிலும், உயர்வானது என கருதும் விடயங்களிலும் உறுதியாக இருப்பது எத்தகைய புறத்தாக்கங்களினாலும் பாதிக்கப்படாது இலக்குநோக்கி செயற்படுவதற்கு எவ்வாறு பங்களிப்பு செய்கின்றது என்பதனையும் அறிந்துகொள்ள முடிகின்றது. குறிப்பாக தனிப்பட்ட பயங்கள், சமூக எதிர்பார்ப்புக்கள், அழுத்தங்கள் என்பவற்றினை சமாளித்து தாங்கள் உண்மையானது என்று நம்பும் பெறுமானங்களில் வெற்றிபெறுவதற்கு எவ்வாறு அர்ப்பணிப்புடனான செயற்பாடு உதவுகின்றது என்பது கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான பாடமாக இங்கு உள்ளது. இவ்வகையில் ஆன்மீக அர்ப்பணிப்பு உளரீதியான சுதந்திரத்தை பெற்றுக்கொள்வதற்கான சக்திமிகு கருவியாக உள்ளமை அறிந்துகொள்ளப்படுகின்றது (Maslow, 1964).

புறவுலக அழுத்தங்களில் இருந்து நீங்கியிருப்பதற்கும், உள்ளார்ந்த பெறுமானங்களின் ஊடாக தம்மை அடையாளப்படுத்திக்கொள்வதற்குரிய இயலுமையினை வழங்குவதற்கும் ஆன்மீக ஈடுபாடு மிகுந்த முக்கியமான உந்துசக்தியாக அமைந்துள்ளது. இவற்றின் ஊடாக கற்றுக்கொள்ள வேண்டிய இன்னுமொரு விடயம் ஒருவர் சுயதிறன் இயல்பில் நிறைவினை அடைவதற்கு குறிப்பிடத்தக்களவான தியாகங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதாக உள்ளன. இவற்றில் தனிப்பட்ட சுய அடையாளத்தை இழத்தல், எதிர்பார்ப்புக்கள், பிணைப்புக்களில் இருந்து நீங்கி தனித்து செயற்படுதல் முதலானவை முக்கியமானவையாக அமைகின்றன.

சிறுத்தொண்டரும், காரைக்கால் அம்மையாரும் ஆன்மீக தன்னிறைவைப் பெற்றவர்களாக உள்ளார்கள். இதற்கு அவர்களது மனப்பாங்கும், செயற்பாடுகளுமே காரணங்களாகும். இதன்படி ஒவ்வொரு தனிப்பட்ட சுயதன்னிறவடைவுகளும் தனிப்பட்ட அடையாளங்களை மீள்கட்டமைப்பு செய்தல், நிர்ணயிக்கப்பட்ட இலக்குடனேயே ஒருவர் தன்னுடைய அடையாளத்தை உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்ற ஏக்கத்துடன் செயற்படுதல், நாளாந்த அழுத்தங்கள், கவனச்சிதறல்களுக்குரிய விடயங்களை புறக்கணித்து மனமொன்றி செயற்படுதல் என்பன அவசியமாக உள்ளன என்பதனை வெளிப்படுத்துகின்றன.

தொடர்ந்து, சிறுத்தொண்டருடையதும், காரைக்கால் அம்மையாருடையதும் வாழ்க்கையினை நவீன உளவியல் கண்ணோட்டத்தில் நோக்குவதன் ஊடாக மீள்எழுச்சித்திறன், அடையாளம், இலக்கு நோக்கிய வாழ்க்கை என்று சமகால உளநல பயிற்சிகள் பல தொடர்பில் படிப்பினைகளை பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது.

- முன்னேற்றத்திற்காக அடையாளத்தை இழத்தலும், மாற்றுதலும் - இரண்டு நாயன்மார்களும் தாங்கள் அடிப்படையில் யார் என்ற அடையாளத்தை இழந்து, புதிய அடையாளத்திற்கு மாறியுள்ளனர். இது நவீன உளவியலின் சுயமாற்றம் அல்லது சுய-பரிணாமம் (Self-Transformation) அடைதல் என்ற எண்ணக்கருவுடன் தொடர்புடையதாக உள்ளது. சிறுதொண்டர் அன்பான ஒரு தந்தை என்ற அடையாளத்தில் இருந்து நீங்கி தன்னுடைய நம்பிக்கையின் பொருட்டு மகனையே தியாகம் செய்யும் புதிய அடையாளத்தை பெற்றுக்கொள்கின்றார். காரைக்கால் அம்மையார் இளம் பெண்ணுக்குரிய அழகு, பிறப்பின்போதே பெற்றிருந்த செல்வந்தமான, சௌகர்யமான வாழ்க்கை என்பவற்றினை தியாகம் செய்து இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட பெண் என்ற புதிய அடையாளத்தை பெற்றுக்கொள்கின்றார். இவர்களுடைய மாற்றங்கள் ஆழமான நோக்கம் ஒன்றினால் திசைகாட்டப்படுகின்றபோது சாதாரண தனிப்பட்ட அடையாளங்கள் மீள்கட்டமைப்பு செய்யப்படுவது இயல்பான ஒன்று என்பதனை வெளிக்காட்டுகின்றன. இவை நவீன உளவியலில் கார்ல் யுங்கின் (Carl Jung) 'தனித்துவப்படுத்துதல்' (individuation) எனும் எண்ணக்கருவுடன் தொடர்புடையதாக உள்ளது. சுயமுன்னேற்றத்தின் உளவியல் செயன்முறையாக யுங்கினால் விளக்கப்படுகின்ற இது ஒரு மனிதன் தன்னுடைய உண்மைச்சுயத்தினை அடைவதற்காக தங்களது உள்ளார்ந்த, முழுமையான இயலுமையினை அறிந்துகொள்ளுதல் என்று விளங்கிக்கொள்ளப்பட முடியும். இது உளச்சுகாதாரத்திற்கும், தனிப்பட்ட முன்னேற்றத்திற்கும் அவசியமானது என்பது யுங்கினது வாதமாகும். நனவுமனம், நனவிலி மனம் மனம் என இரண்டினையும் இணக்கப்படுத்தி ஒன்றினைக்கின்ற செயற்பாடு இங்கு இடம்பெறுகின்றது. இது ஒரு மனிதன் சுயவிழிப்புணர்வுடன் தனித்துவமாக, சுயாதீனமாக இயங்குவதற்குரிய வாய்ப்பினை வழங்குவதாக உள்ளது. உள்ளார்ந்த அமைதி, நோக்கமுடைய வாழ்க்கை என்பவற்றிற்கு இது பங்களிப்பு செய்கின்றது (Koci, 2022: 229; James, 2002: 216).
- தியாகத்தின் ஊடாக உள்ளார்ந்த ஆற்றலை கட்டமைத்தல் - சிறுத்தொண்டருக்கும், காரைக்கால் அம்மையாருக்கும் அவர்கள் மேற்கொண்ட தியாகம் இழப்பு அல்ல. மாறாக ஆன்மீக ஆழத்தில் பெற்றுக்கொண்ட மீள்எழுச்சித்திறனின் வெளிப்பாடாகும். உளவியல் நோக்கில் தனிப்பட்ட விருப்புக்களையும், பிணைப்புக்களையும் கைவிடுதல் என்பது மனிதர்களை வலுவானவர்களாகவும், மீள்எழுச்சித்திறன் கொண்டவர்களாகவும் மாற்றுகின்றது. தங்களது சொந்த

தேவைகளை தாண்டிய வகையில் வாழ்க்கையில் நோக்கத்தைக் கொண்டவர்கள் சவால்களை திறம்பட கையாளக்கூடியவர்களாகவும், சிறப்பாக செயலாற்றக்கூடியவர்களாகவும் உள்ளார்கள். இருவருடையதும் கதைகள் தியாகம் உயர்வான நோக்கத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றபோது வாழ்க்கையின் துன்பங்களை எதிர்கொள்வதற்குரிய உள்ளார்ந்த ஆற்றல் உருவாக்கப்படுகின்றது என்ற நவீன உளவியல் ஆய்வுகளின் முடிவுகளுடன் இசைவாக உள்ளது.

- ஆன்மீக நல்வாழ்வும், அஹங்காரத்திற்கு மேலான செயற்பாடுகளும் - நவீன உளவியல் நோக்கில் நல்வாழ்க்கை என்பது வெறுமனே மனஅழுத்தங்களில் இருந்து நீங்கியிருத்தல் மாத்திரம் அல்ல. மாறாக ஆன்மீகத்தையும் ஒன்றினைத்த மனநிறைவான நிலையினை அடைதல் என்பதாகும். காரைக்கால் அம்மையாரதும், சிறுத்தொண்டரதும் செயற்பாடுகள் எவ்வாறு சில விடயங்களை கைப்பற்றிக்கொண்டிருக்க வேண்டும் என்ற ஆசையில் செயற்படாது அவற்றினை போக விடுதல் (Letting Go) எவ்வாறு உண்மையான நல்வாழ்க்கைக்கு பங்களிப்பு செய்யும் என்பதனை வெளிப்படுத்துகின்றது. இத்தகைய செயற்பாடுகளே வாழ்க்கையில் உயர்வான திருப்தி, மனஅழுத்தமற்றநிலை, உள்ளார்ந்த அமைதி என்பவற்றிற்கு பங்களிப்பு செய்யும் என்பது நவீன உளவியலின் கருத்தாக உள்ளது. இவ்விடயங்கள் ஆன்மீக ஈடுபாடும், அர்ப்பணிப்பும், தியாகமும் ஆழமான உள நலன்களுடன் தொடர்புடைய நன்மைகளை வழங்கக்கூடியது என்பதனை வெளிப்படுத்துகின்றது (Ivtzan, Chan, Gardner, 2013: 920)

### உளவியல் பயிற்சிகளுக்கான பிரயோகங்கள்

தியாகம், சுயமாற்றம் என்று இருவரது வாழ்க்கையில் இருந்தும் கற்றுக்கொண்டிருக்கின்ற விடயங்கள் சமகாலத்தில் பின்பற்றப்படக்கூடிய உளக்குணமாக்கள் செயற்பாடுகளில் பிரயோகிக்கத்தக்க விடயங்களைக் கொண்டுள்ளன. குறிப்பாக இருத்தலிய உளவியல், மீள்எழுச்சித்திறனை உருவாக்குவதற்கான பயிற்சிகள், சுயஅடையாளத்தை மறுகட்டமைப்பு செய்யும் செயற்பாடுகள் என்பவற்றில் இவை நடைமுறைப் பிரயோகத்தைக் கொண்டவையாக உள்ளன.

- இருத்தலிய உளவியலும், வாழ்க்கைக்கு அர்த்தங்களை வழங்குதலும் - இருத்தலிய உளவியல் நல்வாழ்க்கை வாழ்வதற்கு வாழ்க்கைக்கு அர்த்தங்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற விடயத்தினை முன்வைப்பதாக உள்ளது. இருவருடைய வாழ்க்கையில் இருந்தும் இதற்குரிய பாடங்களை பெறக்கூடியதாக உள்ளது. விக்டர் பிராங்கிள் (Viktor Frankl) இனால் உருவாக்கப்பட்ட லோகோ தொரபி (Logotherapy) சவாலான சூழ்நிலைகள், இழப்புக்களுக்கு மத்தியிலும் வாழ்க்கை தொடர்பில் ஒரு நோக்கத்தை கண்டறிவதன் அவசியத்தினை வலியுறுத்துகின்றது (ரிட்லி ஜெயசிங்க, 2010: 62). ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற பயிற்சியாளர்கள் இந்த கதைகளினை ஒருவர் தன்னைவிட மிக உயர்ந்த இலட்சியம் ஒன்றிற்காக அர்ப்பணித்துக்கொள்ளுதல் மீள்எழுச்சிதிறனை உருவாக்கும் என்பதனையும், வாழ்க்கையின் துன்பங்களுக்கு அர்த்தங்களை வழங்கும் என்பதனையும் விளக்குவதற்காக பயன்படுத்திக்கொள்ள முடியுமாக உள்ளது. வாழ்க்கையில் சாதாரணமான புறவுலக விடயங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தவர்கள் அவற்றினை இழக்கின்ற சந்தர்ப்பத்தில் வாழ்க்கையினை தொலைத்தவர்களாக கருத்திக்கொண்டிருக்கின்ற சந்தர்ப்பத்தில் அவர்கள் தங்களைவிட பெறுமதியான ஒன்றிற்காக தங்களை அர்ப்பணித்து செயற்படுவது எவ்வாறு உண்மையான

*அர்த்தத்தை அவர்களது வாழ்க்கைக்கு வழங்க முடியும் என்பதற்கு இந்த உதாரணங்களை மிகச்சிறப்பாக பயன்படுத்த முடியும் (பிரகாஷன். 2025: 309-310).*

- *தியாகம், நீங்குவதற்கு அனுமதித்தல் ஊடாக மீள்எழுச்சித்திறனை உருவாக்குதல் - இழப்புக்களினால் துன்பங்களுக்கு உள்ளாகியுள்ளவர்களுக்கு மீள்எழுச்சித்திறனை உருவாக்கும் உளவியல் பயிற்சிகளில் சேவைநாடிகள் தங்களது தனிபட்ட சவால்களை எதிர்கொள்வதற்குரிய நுட்பங்களை உருவாக்கிக்கொள்வதற்கு வாய்ப்பு அளிக்கப்படுவது அவசியமாக உள்ளது. சிறுத்தொண்டரும், காரைக்கால் அம்மையாரும் தங்களுக்கு மிகவும் நெருக்கமான விடயங்களை இழப்பதற்கு தயாரானமையும், நடந்த விடயங்களை உள்ளது உள்ளபடி ஏற்றுக்கொண்டமையும் அவர்கள் வாழ்க்கையினை நிதானமாக அணுகுவதற்குரிய வாய்ப்பினை எவ்வாறு வழங்கின என்பது ஒரு பாடமாக உள்ளது. இழப்பு தொடர்பான சோகத்தில், பயத்தில், பதகளிப்பில் இருக்கின்றவர்களுக்கு சில விடயங்களை ஏற்றுக்கொள்வது, அவர்களை விட்டு நீங்குவதற்கு அனுமதிப்பதற்கு அதற்கு பின்னர் எவ்வாறு நீடித்த அமையினை ஏற்படுத்தும் என்பது உணர்ந்துகொள்ளச்செய்யப்பட வேண்டியதாக உள்ளது. குறிப்பாக அவர்கள் மேற்கொள்ளக்கூடிய தியாகம், நீங்குவதற்கு அனுமதித்தல் என்பன எவ்வாறு அவர்களை மனவுறுதி கொண்டவர்களாக மாற்றக்கூடியது என்பதனை கவனத்தில் கௌ;ள வேண்டும். ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் அர்ப்பணிப்புச் சிகிச்சை (acceptance and commitment therapy ACT) யின்போது இந்த உதாரணங்கள்; பயன்படுத்தப்பட முடியும். இதன்போது சில பிணைப்புக்களை நீங்குதல் எவ்வாறு மிகுந்த மீள்எழுச்சிதிறனுடைய சுயத்தின் உருவாக்த்திற்கு பங்களிப்பு செய்யும் என்பது கற்றுக்கொள்ளப்படக்கூடியதாக உள்ளது. இவை ஒரு வகையில் இழப்புக்களை தழுவிக்கொள்ளுதல், அதில் இருந்து கற்றுக்கொண்டு புதிய வாழ்க்கையினை அமைத்துக்கொள்ளுதல் என்பவற்றிற்கான வழிகாட்டல்களாக அமைகின்றன (Koenig, 2009: 288).*
- *சுய மறுசீரமைப்பும், சுயதன்னிறைவடைதலும் - சமகால உளவியல் நோக்கில் ஒருவருடைய சுய அடையாளம் என்பது சமூகம் உருவாக்கிய பாத்திர அமைப்புக்களினால், தனிப்பட்ட நம்பிக்கைகளினால், பார்வை நிலைகளினால் உருவாகின்றது. ஆனால் இவை ஒருவருடைய உள்ளார்ந்த பெறுமானங்களை விட குறுகியவையாக இருப்பதற்கு வாய்ப்பு உள்ளது. சிறுத்தொண்டரும், காரைக்கால் அம்மையாரும் ஆரம்பநிலையில் கொண்டிருந்த சுயஅடையாளத்தை அழிப்பதானது எவ்வாறு ஒருவருடைய உண்மையான இலட்சியபூர்வமான சுயஅடையாளத்தின் உருவாக்கத்திற்கும், வாழ்க்கையினை முழுநிறைவாக வாழ்வதற்கும் பங்களிப்பு செய்யும் என்பதனை எடுத்துக்காட்டுபவையாக உள்ளன. கதைச்சிகிச்சை (narrative therapy) முறையின்போது ஒருவர் பிரச்சினையினை தான் சார்ந்தாக அல்லாமல் தன்னில் இருந்து பிறிதொன்றாக எடுத்து நோக்குவதற்கும், அதிலிருந்து நீங்கி தன்னுடைய வாழ்க்கையினை புதிய கோணத்தில் அமைத்துக்கொள்வதற்கும் இந்த நுட்பங்கள் பயன்படுத்தப்பட முடியும் (Ivtzan, Chan, Gardner, 2013, 923). இதன்போது பிரச்சினையுடன் இருப்பவர்கள் தங்களது வாழ்க்கைக்கதையினை மீள்நோக்கி அதில் உள்ள சிக்கல்களை அடையாளம் கண்டு, புதிய நோக்கில் வாழ்க்கையினை அணுகுவதற்குரிய வாய்ப்பு உருவாக்கப்படுகின்றது. இவ்வாறு*

தங்களைப்பற்றி புதிய சுயஎண்ணக்கருவை உருவாக்கிக்கொள்வதற்கும், புதிய வாழ்க்கையில் பரிணமிப்பதற்கும் இவ்விருவரதும் வாழ்க்கை ஒரு முன்மாதிரியாக அமைந்துள்ளது.

### முடிவுரை

சிறுத்தொண்ட நாயனாரினதும், காரைக்கால் அம்மையாரதும் வாழ்க்கை தொடர்பான உளவியல் பகுப்பாய்வு சுயமாற்றம், தியாகம் என்பவற்றுடன் தொடர்புடைய ஆழமான உள்ளுணர்வுகளை வழங்குபவையாக உள்ளன. இவர்களுடைய வாழ்க்கை ஆன்மீக தளத்தில் மாத்திரம் அல்லாமல் உளவியல் நோக்கில் மீள்எழுச்சித்திறனை உருவாக்குவதற்கும், சுயஅடையாளத்தை மீள்கட்டமைப்பு செய்வதற்கும், உளரீதியாக நல்வாழ்க்கை வாழ்வதற்கும் எடுத்துக்காட்டுக்களாக உள்ளன என்பதனை அறிந்துகொள்ள முடிகின்றது. இவர்களுடைய வாழ்க்கை நோக்கத்தினால் வழிகாட்டப்பட்ட, உத்வேகமளிக்கப்பட்ட வாழ்க்கையினை முழுநிறைவாக வாழ்வதற்குரிய பாடமாக உள்ளது. சமகாலத்தில் இருப்பியல் சார்ந்த உளக்குழப்பங்களுக்கு உள்ளாகியிருப்பவர்களுக்கு இந்த பாடங்கள் மிகுந்த பயனுடையவையாக உள்ளன. வாழ்க்கையில் உயர்வானவை என்று கருதிக்கொண்டிருக்கும் விடயங்களை இழப்பது அந்த வாழ்க்கையின் முடிவு அல்ல மாறாக புதிய கோணத்தில் வாழ்க்கையினை அமைத்துக்கொள்வதற்கும், சுய-தன்நிறைவு பெறுவதற்கும் இவை உத்வேகம் வழங்கக்கூடியவையாக உள்ளன.

இந்த ஆய்வானது தமிழ், இந்துசமய இலக்கியங்களை புதிய கோணத்தில் அணுகுவதற்குரிய ஒரு முன்முயற்சியாக மேற்கொள்ளப்பட்டதாகும். பெரிய புராணம் போன்ற நூல்களில் உள்ள கதைகளை வெறுமனே கதைகளாக அறிந்துகொள்வதனைவிட அவற்றில் இருந்து சமகால தேவைக்கு உகந்த வகையில் புதிய அறிவினை உருவாக்கிக்கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வதும் இந்த இலக்கியங்களை சமகால தேவைகளுக்கு இணங்க மறுபதிப்பு செய்ய வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்துகின்றது. மேலும் புலமைத்துவ செயற்பாடுகளில் வெறுமனே கடவுளது இருப்பினை நிருபனம் செய்தல், கடவுளது இயல்புகளை மெச்சுதல் என்பவற்றினை தாண்டி கடவுள் பக்தி எவ்வாறு தனிமனிதர்களது நிலைமாற்றத்திற்கும், வாழ்வியல் சவால்களை எதிர்கொள்வதற்கும் கருவியாக பயன்பட முடியும் என்பதும் இதன் ஊடாக எடுத்துக்காட்டப்பட வேண்டியுள்ளது.

இத்தகைய இலக்கியங்களில் உள்ள விடயங்களை பிற சமய இலக்கியங்களுடன் ஒப்பிட்டு நோக்குவதன் ஊடாக மேற்கொள்ளக்கூடிய ஆய்வுகள் மாறுபட்ட சமூகங்களில், கலாசாரங்களில் எவ்வாறு சமயங்கள் வாழ்வியல் வழிகாட்டல்களை வழங்கக்கூடியவையாக உள்ளன என்ற புரிந்துணர்வினை பெறுவதற்கும், ஒவ்வொருவரும் தங்களது சமயங்களது ஆழமான, தனித்துவமான சிந்தனைகளை புரிந்து பின்பற்றுவதற்கும் வாய்ப்பினை உருவாக்கும். மேலும் உளவியல், உள ஆற்றுப்படுத்தல் முதலான துறைகளில் செயற்படுபவர்கள் இத்தகைய இலக்கியங்கள் தொடர்பில் பெற்றுக்கொள்கின்ற அனுபவம் தங்களது துறைசார்ந்து புதிய அணுகுமுறைகளை உருவாக்குவதற்கு உதவும். சமய போதகர்களும், பேச்சாளர்களும், ஆன்மீக வழிகாட்டிகளும் சமய இலக்கியங்களில் உள்ள உள ஆற்றுப்படுத்தல் அம்சங்களை தெளிவுடன் அறிந்துகொள்வது தங்களது மக்களுக்கு சமய வழிகாட்டல்களை நடைமுறைச்சாத்தியமான வகையில் கொண்டு சேர்ப்பதற்கு உதவியாக இருக்கும். இவ்வகையில் இந்த ஆய்வானது தொடர்ச்சியான வகையில் உளவியல், ஆன்மீகம், கலாசார கற்கைகள் முதலானவற்றை ஒன்றினைத்த வகையில் ஆய்வுகளை மேற்கொண்டு இருப்பியல் சார்ந்த சவால்களை எதிர்கொண்டுள்ள சமகால மக்களுக்கு சரியான வழிகாட்டல்களை மேற்கொள்வதற்கான ஒரு முன்முயற்சியாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**References**


Alagarsamy, A., K. (2000). *Periya Puranam-Eliya Nadaiyil*. Karpagam Puthakalaya.

Gaur, A. (1990). *Slaves of the lord: the path of the Tamil Saints*. By Vidya Dehejia. pp. xi, 2 0 6 , 89 illus. New Delhi, Munshiram Manoharlal Publishers Pvt. Ltd., 1988. Rs. 300. *Journal of the Royal Asiatic Society of Great Britain & Ireland*, *122*(2), 411–422. https://doi:10.1017/S0035869X00108871

Hudson, D.D. (1989). Violent and Fanatical Devotion among the Naranars: A Study in the Periya Puranam of Cekkilar, in A.Hiltebeitel *Criminal Gods and Demon Devotees – Essays on the Gurdinans of Popular Hinduism,* USA: State University Press, pp. 373-404.

Ivtzan, I., Chan, C.P.L., Gardner, H.E. *et al.* (2013). Linking Religion and Spirituality with Psychological Well-being: Examining Self-actualization, Meaning in Life, and Personal Growth Initiative. *J Relig Health* 52, pp. 915–929 https://doi.org/10.1007/s10943-011-9540-2

James, W. (2002). *The varieties of religious experience: A study in human nature*. Penguin Classics.

Kamalavelam, M. (2009). *Samayam Valartha Sandroor-Karaikal Ammaiyar*. Palaniyappa Brothers.

Koci, K. (2022). Introduction: Sacrifice and Self-Sacrifice: A Religious Concept under Transformation. *Interdisciplinary Journal for Religion and Transformation in Contemporary Society* 8, 2, 225-233, Available From: Brill https://doi.org/10.30965/23642807-bja10062 [Accessed 12 November 2024]

Koenig H. G. (2009). Research on religion, spirituality, and mental health: a review. *Canadian journal of psychiatry. Revue canadienne de psychiatrie*, *54*(5), 283–291. https://doi.org/10.1177/070674370905400502

Kumaran, R. (2014) *Devotional norms featured in Periyapuranam.* Journal of Indian Culture and Civilization, 1. pp. 1-7., Access here: https://eprints.um.edu.my/14799/

Manonmani, M. (2011). *Kalathai Vendra Pelgal*. Arivu Publications.

Maslow, A. H. (1964). *Religions, values, and peak experiences*. Penguin Books.

Monius, A. E. (2004). Love, Violence, and the Aesthetics of Disgust: Śaivas and Jains in Medieval South India. *Journal of Indian Philosophy, 32(2/3), 113–172.* https://doi.org/10.1023/B:INDI.0000020898.04782.7a

O'Flaherty, W. D. (1988). *Asceticism and eroticism in the mythology of Śiva*. Oxford University Press.

Peck, M.S., 1978. *The Road Less Traveled: A New Psychology of Love, Traditional Values, and Spiritual Growth*. New York: Simon and Schuster.

Prakashan, M. (2022). "Siruthondar nayanar Puranam Matrum Athiyagama Abraham-in Kathai Enpanavatril Velipaduthapadum Irai Visuvasam-Oru Vimarsana Nookku", *Panbadu*. 29(2) pp. 75-84.

Prakashan, M. (2025). *Nigalviyamum Iruthaliyamum: Kodpadugalum Prayogamum*. Semamadu Publications.

Redly Jaysing. (2010) *Ulaviyalsar Ulavalathunai Anugumurai*. Kumaran Publicatios.

Selvarasu, N. (2023). *Karaikal Ammaiyar Thonmam*. Kalachuvadu Pathipakam.

Yaden, D.B., Newberg, A.B. (2022). *The Varieties of Spiritual Experience – 21st Century Research and Perspectives.* USA: Oxford University Press

Yogananda, P. (2006). Sacrifice as a path to self-realization: A transpersonal perspective. *Journal of Transpersonal Research, 21*(1), 23-47.